உ

ஸ்ரீ ஔவையாரென்னும்

அம்பிகையம்மன் சரித்திரம்

349
அ17/1

இவை

கோலார் தங்கத்தரை

சாம்பியன் ரீப்ஸ் சாக்கைய புத்தசங்கத்தாரால்

வெளியாக்கப்பட்டது

இரண்டாம் பதிப்பு

பி. ஆர். ராம ஐயர் அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பெற்றது.

(ஸ்ரு 3402, கார்த்திகைமீ

1916ஸ்ரு டிசம்பர்மீ)

Q25:47
N6
183654

அறிவோம் நன்றாக குருவாழ்க குருவேதுணை.

ஆடிமாதத்தியான

அம்பிகையம்மன் சரித்திரம்.

23 JAN 1917
MADRAS.

உம்பர் கோனுல காதிகுருபர
னெம்பிரானடியை சிரந்தாங்கியெய்
பம்பைசேர் திரி சிலமேயோதுமா
அம்பிகையம்மை யாற்றலறைகுவாம்.

திருவளரு மண்ணவர்க்கு முதல்வினீயே
தேடறிய விண்ணவர்க்கு மாதினீயே
குருபாரு லோதிய முப்பிடகந்தன்னை
குவலயத்தோர்க் கோதுபிட கறியுநீயே
கருமறுவு வாணிசாசுவதியாகி
கமலாசனத்தி வேம்படி யமர்ந்தேதாய்
மருவுதெறி தன்மசங்க வடியவர்க்கு
வல்லபைநின் தீபவொளி யருளுமாதோ.

இஃது

சென்னை சாக்கைய புத்தசங்கத்தோரால் வரைந்து கோலார் சாம்பியன்
சாக்கைய புத்தக விலேச்சங்கத்தோரால் பதிப்பிக்கப்பட்டது.

சென்னை
பி. ஆர். ராம ஐயர் அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பெற்றது
1916

183654

விசேஷ அறிக்கை.

திராவிட பௌத்தர்களாகும் சாக்கைய சோதரர்களே
சற்று கவனியுங்கள்:—

நமது தேசத்துப் பெண்களுள் இந்திர வியாழஞ்சேர்த்து விவேக மிகுதியால் பரிநிருவாணம் பெற்று,

"விண்ணோர் தலைவி மண்ணோர் முதல்வி"

என நமது மணிமேகலைக்கொண்டாடிய அம்மனை நாம் ஆடிமாதந் தோறுங் கொண்டாடிவருவது வழக்கமாயினும் நமது சத்துருக்களாகும் பராய சாதியோர் போதனையால் சாந்ததேவியாகும் ஆம்மனுக்கு கோழியையும் ஆட்டையும், மாட்டையும் பலிகொடுத்து கொல்லாவிரதத்தையும் ஒழுக் கத்தையுங் கெடுத்துக்கொண்டு ஊர் காவற்காரியும் காவலூர் அம்மனுமே விளங்கிய கிராமதேவியின் நிலங்களையுங் கெடுத்துவருகின்றோம்.

வங்காளத்தரசியாம் காளிகாதேவிக்கும், மதுரை கன்னகாபரமேஸ்வரிக் கும் உயிர்பலிகொடுப்பது வழக்கமேயன்றி கிராமதேவியாய் அவ்வை, அம்மை என வழங்கி "கொலையும் புலையுங் களவுந்தவி" ரெனுஞ் சாந்ததேவியாம் அம்பிகைக்கு உயிர்பலி கிடையாது.

இத்தகைய உயிர்பலிச் செயலால் நாளுக்கு நாள் நமது கிராமம் பாழ டைவதுடன் நாமுஞ் சோழிந்துவருகின்றோம்.

இனியேனும் சத்துருக்களின் போதனையை மறந்து பூர்வதன்மத்தை நினைந்து சுத்தசீலத்தில் நிந்திப்போமாக.

அதாவது பௌத்ததன்மப் பிரியர்கள் ஒவ்வொருவரும் ஆடிமாதத்தில் அம்மனை நிந்திக்குங்கால் ஆடிமாதப் பௌர்ணமியிலேனும் ஓர் ஆதிவாரத் தேனும் ஒன்றுகூடி வீடுகடோரும் பொங்கற்பானை அமுதுகொண்டு அம்மன் வியாரத்திடஞ்சென்று பொங்கல்வைத்து எல்லோர் சாதத்தையுங் கும்பமிட்டு ஆரியபின்பு ஏழைகளுக்கு தானஞ் செய்தவிடவேண்டியது.

சிலர் பலிக்கு பதிலாக தேங்காய் உடைக்கவேண்டுமென்று சொல்லு வார்கள். அவ்வகையான எண்ணங்களையும் நீங்களனுசரிக்காமல் தேங்காய் களையுடைத்து அவலுடன் கலந்து ஏழைகளுக்கு அவற்பிரசாதமும் கொடுத்து விடவேண்டியது.

அவற்பிரசாதமும் பொங்கல் அன்னப்பிரசாதமும் புசிக்கவேண்டிய குடும்பத்தோர் அம்மன் வியாரத்திடஞ் சென்று ஆனந்த வனபோசனஞ்

செய்து வீட்டிற்கு யாதொரு மிருதி பதார்த்தங்களையுங் கொண்டுவரப் பட்டாது.

இத்தகைய பொங்கலிட்டு அன்னதானஞ் செய்யாத குடும்பத்தோர் வீடுகளில் கேழ்வரகு கூழ்செய்து ஏழைகளின் வயிறுகுளிர வார்க்கவேண்டியது.

பூவாடைக்காரியை பூங்ரகம் நிறுத்தி ஊர்வலம் வருவதாயிருந்தால் அக்கரகமெடுப்பவனே தேகசுத்தஞ்செய்து மஞ்சளாடை யணிந்து பத்துநாள் தசசீல விரதக் காப்புக்கட்டி அப்பத்துநாளும் நாளொன்றுக்கு ஒருவேளை போஜனமுண்டு இரவில் பாயாச மருந்தி தன்வீட்டிற்குப் போகாமல் அம்மன் வியாரத்திலேயே தங்கி தன் தேகத்தால் யாதாமோ ருயிருக்கு தீங்குசெய்யாமலும், நாவினு லொருவரைச் கொடுசொல்லாத்தைப் பேசாமலும், இதயத்தில் யாதோர் தீங்கான எண்ணங்களை நினையாமலும் பூங்கரகத்தை சிரசிலேந்து சிராமப் பிரதிஷ்டை செய்யவேண்டியது.

இவ்வகைச் செய்யக்கூடாதவர்கள் ஒருநாளேனும் இத்தகைய விரதத்தி லிருந்து ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்வதே விசேஷ தன்மமாகும்.

கள்ளு சாராயத்திற் குதவியாய் கோழியையும் ஆட்டையுங் கொன்று தின்றுவிட்டு அம்மனுக்கென்று பழிசுமத்துவது அதி பாபமேயாம்.

சிலசமயத்தோர் ஆட்டுக்கடாதலையில் தங்கள் பாபத்தை சுமத்தி காட்டுக் களுப்பிவிடுவதென்றும் இளங் கன்றுக்குட்டிகளையும், இளம் ஆட்டுக்குட்டி களையும் இளம் புறுக்குஞ்சுகளையுங் கடவுளுக்கு பலிகொடுத்தால் சுகமடைவீர் களென்று வஞ்சித்து தங்கள் புசிப்புக்குத் தக்க இளந்தை மசமிஷந் தேடு வார்கள.

அதுபோல் அம்மன் வன்னிய பூசாரிகளும் அம்மனுக்கு ஆடு பலி கொடுத்து அதன் தலையைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் கோழிபலியைக் கொடுத்து தட்சனை வாங்குவதற்கும் சாமிவந்ததென்று தலையாட்டி சடை குடுப்பானடிப்பார்கள்.

அவர்கள் சாமியாட்டங்களுக்கு நீங்கள் அஞ்சாமல் உயிர்வதையை நீக்கி அன்னதானத்தை அன்புடன் செய்துவருவீர்களானால் ஆனந்த சுகமடைவீர் கள். இதுவே சத்தியதன்மமாகும்.

க. அயோத்திதாச பண்டிதர்.

30—8—08.

ஆடிமாதத்தியான

அம்பிகையம்மன் சரித்திரம்.

பின்கலை நிகண்டு.

மரகதவல்லிபூக மாநிழலுற்றவஞ்சி
பரமசுந்தரியயக்கி பகவதி அம்மையெங்க
ளருகனே முடிதரித்தா ளம்பிகை யறத்தின்செல்வி
தருமதேவதைபேரம்பா லிகையென்றுஞ் சாற்றலாமே.

ஆயிரத்தி யைந்நூறு வருடங்களுக்கு முன்பு தென் பாதகண்டத்துள் புங்நாட்டை யரசாண்டுவந்த சாக்கைய சுந்திரவாகு வெண்பவருக்கு ஓர் பெண் குழந்தை பிறந்து அப்பிகாதேவி என்னும் பெயரிட்டனந்த சீராட்டி வளர்த்து வந்தார்கள். பெண்களின் பேதைபருவமாகும் ஏழுவயதுக்குள் இனிய அமு தென்னும் தமிழட்சாங்களையு மொழிகளையுமூட்டி அறிவை வளரச்செய்யுங் கால் பெதும்பை வயதாகும் பதினோராம் ஆண்டில் நமதருகனுகும் புத்த பிரான் செயலையும் அவர் குணதிசயங்களையும் நாளுக்குநாள் கேள்வியுற்று அவர் பதுமாசன முற்றிருந்ததைப்போல் ஓர் சிறியச் சிலைசெய்து அதை தன் முடியிற் கட்டிக்கொண்டு இடைவிடா நீதியின் சாதனங்களால் அவரை சிந்தித்துவந்தான்.

இவ்வகை நிகழ்ச்சியால் மங்கைபருவமாகும் பதின்மூன்றாம்வருட முதித்து வதுவைகால வாக்கியங்க ளெழும்பிற்று.

அதைக் கேள்வியுற்ற அம்பிகாதேவி தன் தந்தை சுந்திரவாகுவை யணுகி, என தருமெய்த் தந்தையே! நமது குலகுருவா லேற்படுத்தியுள்ள பெண்களின் ஞானசங்கத்திற் சேர விருப்புற்றிருக்கின்றேன் தடைசெய் யாமல் உத்திரவளிக்கவேண்டுமென வருந்தினுள்.

அதைக்கேட்ட வரசன் மனங்கலங்கி ஞானதேற்றலடைந்த குழந்தாய், பெண்களின் ஞானசங்கத்திற் சேரும் விருப்பம் உனக்கு பேதைபருவததி விருக்கவேண்டும் அல்லது விவாகமுடிந்து சிலகாலம் உன் புருஷனும் நீயும் சுகவாழ்க்கை கழிந்து உன் கணவன் புருஷசங்கத்திலும், நீ பெண்கள் சங்கத் திலும் சேரவேண்டியது தருமகட்டளை. இதைத் தவிர்ந்து மங்கைபருவ முற்ற உன்னை பெண்கள் சங்கத்திற் சேர்க்கமாட்டார்களே யாது செய்யுது மென்றான்.

அம்பிகாதேவி யரசன் முகத்தைநோக்கி என்னருமெய்த் தந்தையே,

நீ செவ்வித முயற்சியேனுஞ்செய்து பெண்கள் சங்கத்தில் என்னை சேர்த்து விடல்வேண்டுமென வருந்தினாள்.

அரசன் மந்திரிப் பிரதானியரைத் தருவித்து தனது புத்திரிக்கும் தனக்கும் நடந்த விருத்தாந்தங்களை விளக்கினான். அதை யவர்கள் தீர்க்க வாலோசித்து அரசே, உமது புதல்வியின் கழுத்தில் தாய்மாமனால் ஓர் பொட்டுக்கட்டி அறஹத்துக்களுக் கறிக்கையிட்டு பெண்டுகள் சங்கத்திற் சேர்த்துவிடுவதே விதியென்றார்கள்.

உடனே யரசன் அம்பிகாதேவியின் தாய்மாமன் கந்தருவதத்தனை யழைத்து சங்கதிகள் யாவையும் விளக்கி பொன்னினா லோர் பொட்டுசெய்து சரட்டிற் கோர்த்து தன் புதல்வியின் கழுத்திற் கட்டும்படிச்செய்து சமணந்தீதார் உத்திரவுபெற்று உமள நாட்டு வியாரத்துப் பெண்கள் சங்கத்திற் சேர்த்து விட்டான்.

அம்பிகா தன்மம்

திருவளர் செல்வி தேவி யம்பிகை
யருமறைப் பீடிகை யாதன முணர்ந்து
போதி மாதவன் பொற்கழ லேந்தி
யாதிதேவியென் றறவோர் போற்றும்
அவ்வை யென்னு மைந்நெறிக்களத்தி
செவ்விய தன்மம் செப்புவங் கேண்மின்
தென் பரதத்து துரைபுந நாட்டின்
மன்னவன் சாக்கை சுந்திரவாகு
நற்றவத் துதித்த நானில முதல்வி
பேதைப் பெதுமைப் பாலையுங் கடந்து
மாதர்ப் பருவ மங்கைமெய் யடைந்து
அம்மையர் தண்ம சங்கமமரும்
மிம்மெயி னேக்க மிருதியினின்று
தாதையை யணுகி தற்பரன் வியாச
சாதன மடிருந் துரையருள்வீரென
வோதிய மொழியை யுள்ளத் தமைத்து
தாதையு மந்திர சாதனர்க் கோதி
மங்கைப் பருவம் வாய்ந்த மகட்கு
தன் தாய் மாமன் பொன்சர டிட்டு
சமண நீத்தோர் தன்னுரைக் கொண்டு
அறவுரை யென்று மடித்துணர் திரிவி
பிறவியம் பாசப் பந்தங் கழற்றி
பிடக மும்மொழிப் பிரித்துலகோர்க்குத்
திடமுறு திரிவா சகமதா விரித்து
உமள நாட்டு வுமை வியாரத்துள்.

திரிபிடக விசாரிணையினின்று சீலசாதனங்கொண்டு உண்மையுணர்ந்த வானந்தத்தால் பெண்கள் வியாரத் தெதிரிலுள்ள பூக மரமென வழங்கும் வேம்புமரத்தடியில் வந்து உழ்க்கார்ந்து பெரியோர்கள் முதல் சிறுவர்கள் வரையில் எளிதி லுணருமாறு திரிபிடக தரும போதங்களை எளிய வாசக நடையில் திரிவாசகங்களாக போதித்துவந்தாள். பிடகத்தை யறிவித்தவா ளதலின் பிடகறி பிடகறி யென்னு மூதற்பே ரளித்தார்கள்.

பிடகறி பிடாறி யென்னுங் காரணப் பெயர்பெற்ற வேம்படியம்பாள் தான் மோனனிலையாலடைந்த ஞானவிழி பார்வையால் செல்லல் நிகழல் வருங்கால மூன்றின் பலன்களையும் குடிகளுக்கு விவரித்துவந்தகாலத்தில் நாகைகாடென்னும் தேயத்தில் மழை குன்றி சாமளை யென்னும் விஷப் பூச்சுக்களின் கொடுத்தால் வைசூரி, உவாந்திபேதி யென்னும் மாறியாகிய வியாதிகள் தோன்றி மக்களும் விலங்கும் துன்புருங்கால் குடிகள் பயந்து காவிரி உமளம் உமை வியாரத்துள் வேம்படி நிழலில் வீற்றிருக்கும் அம் மனிடஞ் சென்று விசாரித்தால் இம்மாறிக்கு ஏதேனும் பரிகாரஞ்சொல்லுவா ளென்னும் அவாக்கொண்டு உமளநா டணுகி அம்பிகையை சேவித்து நாகை நாட்டின் குறைகளை விளக்கினர்கள்.

அம்மன் உள்விழிநோக்கி மக்களை யழைத்து உங்கள் உள்ளங்களிலுள்ள அன்பையும் அறனையு மகற்றி வஞ்சகம், பொருமெய், பொருளாசை, கெடு மதி இவைகளை நிரப்பிக்கொண்டபடியால் வானம் பெய்யாது சாமளையென் னும் விஷக்காக்று உங்கள் நாட்டிற் பரவி உயிர்களைக் கொள்ளைகொள்ளுகின் றது.

இப்பவும் உங்க ளுள்ளங்களிலுள்ள கள்ளங்களை யகற்றி இதயசுத்தஞ் செய்வதுடன் வீதிகளையும் வீடுகளையுஞ் சுத்தஞ்செய்து மட்டிப்பால்புகை கற்பூரப்புகைகளை வீடுகளெங்கும் கமழ நிரப்பி நிம்பத்தா ரென்னும் வேப் பிலைத் தோரணங்களைக் கட்டுவதுடன் வீட்டின் வாயற்படிகளிலுஞ் சொருகி பலதானியங்களை உப்பிடாமல் அவித்து எழைகளுக்கு தானங்கொடுப்பதுடன் பச்சரிசிமாவுங் கூழுந் தானமளிப்பீர்களாஞல் இதய சுத்தத்தாலும், தேக சுத்தத்தாலும், வேப்பிலை மணத்தாலும், கற்பூரப் புகையாலும், அவிரிப்புகை யாலும் சாமளைப் புழுக்களகன்று கொள்ளைநோய், தணிந்து குணமடைவீர்க ளென்ற வாக்கைக் கேட்டவுடன் நாகைநாட்டுக் குடிகள் இதயசுத்தம் தேக சுத்தம் செய்ததுடன் அன்பைப் பெருக்கி தானமளித்த விஷயத்தால் கொள் ளைநோய் நீங்கி உள்ளங் குளிர்ந்தார்கள்.

சமண நீத்தோர் தண்ணந்தம்மருள்
பெற்று காவிரிபூகநீழ
லுற்று யாக்கை யுண்மெ யுணர்ந்து
நாகை நாடு நடுக்குதன் மாறி
வேக மாற்ற வுரவோர்க்கன்று
வன்பு மறனு மகலவிட்டார்

துன்பக் கிருமி துடர்ந்த துள்ளம்
உள்ளக் களங்க மகற்றி யூரின்
தெள்ளுந் தூசித் துடைத்து மட்டிப்
பாலின் புகையும் பூரப்புகையும்
நீலிப் புகையும் நிரம்பப் பயின்று
பாகு மாவுங் கூழும் பயிறும்
வேகுங் கும்பிக் கிட்டு மவித்து
உண்டி கொடுத்து வுயி ரளிப்பீரேல்
பண்டை வினையின் பற்றறுப்பீர்காள்
நிம்பத்தாரி னிரை தோரணங்க
ளம்பல மீதி யெங்கு நிரப்பி
வாய நிலையிலு மாட மலைவிலும்
நேய நிம்பத் தார்மண மூட்டி
மங்கைமாதர் வேராமஞ்சள்
கெங்கைமிழங்கைக் கூட்டறைவித்து
தேகமெங்குந் தீட்டி குளித்து
வேகசுன்னக் குங்குமமிட்டு
யகுகவாரி யன்பி னிலையால்
தகை மும்மாரிப் பெய்து சாமளைக்
கிருமி யகன்றுக் கிருபாக் கடலா
மருக னருளும் வாய்மெயு முருமென
சாமளை யுற்ற சிலுகை விளக்கி
வாமன் பிடகம் வரை யறுத்தோதி.

அம்மன் வாக்கிலுறு சொன்னபடி நாகைநாட்டாரைவதைத்தக் கொள்ளை நோய் அகன்று சுகமுற்றவைகளைக் கண்ட ஒவ்வோர் அரசர்களுங் குடிகளும் அம்மனை வந்து தாமரைப் புட்பத்தால் அற்சித்துக் கொண்டாடியதுடன் பல வகைப் புட்பங்களால் அம்மன் தேகத்தையும் மறைத்து ஆனந்தத் தியான முற்றிருக்குங்கால் அம்மன் சிறுவர்கள்முதல் பெரியோர்கள் வரையில் நீதி மார்க்கத்தினின்று நிருவாண சுகமடையும் போதி போதங்களாகிய திரிவாச கம், மூதுரை ஞானக்குறள் இரத்தினசுரண்டகம் முதலிய நூற்க ளியற்றி அரசர்க்காங்களி லீய்ந்து மடங்களுக்குமனுப்பி தசசீலாம்சங்களைப் பாவச் செய்துவந்ததமல்லாமல் ஆகியங்கடவுளாகிய சாக்கைய முனிவரின் மும் மொழியும் மும்மொழிகளைத் தழுவிய நான்கு பேதவாக்கியங்களின் முடிவும்

முனிவன் கண்ட முதனூ னிருவி
னிய வழிநூ லியற்றினன் நாயன்.
முதனூல் வழிநூல் முற்று முணர்ந்து
விதய் மும்மறை முடிபுரையாற்றி
படிமிசை மூவர் பெருதிரு மந்திரம்

மூடிபுரை யாற்றி மொழிந்தனர் சார்பாய்.
மூஷர் மொழிந்த மந்திர மூன்றுஞ்
சால மொழிந்தேன் திரிவாசகம் யான்.

மூலர் திரிமந்திரமும் நாயனூர்த் திரிக்குறளும் ஞானியற்றியுள்ளத் திரி வாசகமுமாகிய நூற்களில் முனிவர்நூல் முதனூலும், நாயனூர் நூல் வழி நூலும், மற்றும் நூற்கள் சார்பு நூற்களென்றும் விளக்கிக் காண்பித்தாள்.

எங்கெங்கு மழை குறைந்து புழுக்கந் தோன்றுகிறதோ அவ்வவ்விடங் களில் பதின்மூன்றுவகை வைசூரியும் மூன்றுவகை பேதியுந் தோன்றி சீவர் களைக் கொள்ளைக்கொள்ளுவதற்கு கண்ணுக்குத்தோற்ற சாமளையென்னுஞ் சிறுப் புழுக்கூட்டங்களே காரணமா யிருந்தது. அப்புழுக்கூட்டங்கள் அகலு வதற்கு வேப்பிலை சற்பூரப் புகை, மட்டிப்பால் புகை, அவரிப்புகை இவைகளை வீடுகள் வீதிகளெங்கும் கழுழச்செய்து சீவராசிகளின் நாசியிலும் நாவிலும் புழுக்கள் நுழைந்து கொள்ளைக்கொள்ளுவதால் பலதானியங்களை உப்பிடாம லவித்துப் பச்சரிசிமா விடித்தும் அதில் வேப்பிலையைக் கலந்து சகலரையுஞ் சாப்பிடும்படி தானஞ்செய்வதால் உள்ளுக்கு நுழைந்த புழுக்கள் கழிந்து மாறி தோன்றுமனிற்கவும் போதித்து கொடிய மாறியென்னுங் கொள்ளை நோய் வெப்பத்தை ஆற்றினவளாதலால் கொடுமாறியை யாற்றிய மாறியாத்தாள் மாறியாத்தாளென்றுங் கொண்டாடிவந்தார்கள்.

அம்மன் வாக்கில் தோன்றுந் திரிகாலக் ஞானங்களுக்கும் மகிழ்ந்து அரசர்கள்முதல் பலதேசக்குடிகளும் வந்து சூழ்ந்துக்கொண்டது மல்லாமல் சிம்மம், யானை, பாம்புமுதலிய ஜெந்துக்களுஞ் சூழ்ந்து அறவுரைக் கேட்ட துடன் அவரவர்களுக்குள்ள அந்தரங்கக் குறைகளையுங் கேழ்க்கும்படி பெருங் கிய கோஷத்திற்கஞ்சி ஆகாயத்திலெழும்பி சோதிரூபமாக அந்தரத்தில் நின்று விட்டாள்.

ஞானவெட்டி.

வானத்தெழுந்த வாலாம்பிகைதன்னை
மதியாலறிந்து கதியடையாமலும்
ஏனந்தனின் மூளத்தெழுந்த கொழுந்தை
யிறுக்கிஞ னினிமுறுக்கிக் கிள்ளியே
ஞானப்பிரகாச மெய்ஞான வித்தாகையால்
நாடிச் கருவூரில் நாதத்துடன் கூடி
மீன மேஷ மறியாமல் குருவந்து வீணதாம்
பூசை விருதாவிற் செய்யவும்.

பூசை.

அவற்றைக்கண்ட குடிகளும் அரசர்களும் அந்தரத்துள்ள அம்மனை சரணத்திக் கோரி வந்தித்ததின் பேரில் அம்மன் மறுபடியும் வேம்புமரத் தடியில் வந்துட்கார்ந்து அரசர்களை வரவழைத்து திரிபிடக வாக்கியங்களாகும்

திரிசீலமே-தத்துவம், திரிசீலமே-சத்தியம், திரிசீலமே-உத்தமம். அதுவே யுங்களைக் காக்கும் தெய்வமென விளக்கி திரிசீல ஜாக்கிரதம் ஜாக்கிரதமென் றருளி கொல்லா நோன்பு, குறளா நோன்பு, கள்ளா நோன்புகளாகிய திரி நோன்புகளையும் பதித்து வாக்குக் காப்பு, மனோ காப்பு, தேகக் காப்பாகுந் திரி விரதங்களையு மோதி தான் பரிநிருவாணமடையுங் காலத்தையுஞ் சகலருக்குந் தெரிவிக்கச்செய்து ஆடிமாதம் பதினெட்டாம்நாள் ஆதிவாரம் பௌர்ணமி திதியில் அம்மன் பதுமாசனத்திருந்து இருவிழிகளை மூடி சுகசமாதி யுற்றக் கால் சுயம்பிரகாசசோதி உச்சியின் வழியாய் தீபம்போ லொளிர்ந்தது. அதைக் கண்ட வரசர்களுங் குடிகளும் பதரிப் பிரலாபித்து தங்கடங்கட் கண் களில் தாரைதாரையாய் நீர்வடிய சிரமீ திருகரங்களைக் கூப்பி அம்ம வடிவுடை யாட்டி-வால அம்பிகை-அறமுதற் செல்வி-ஆதி தேவி-உற்ற எண்ணமுறைக் கும் ஆயி-உள்ளக்குறையை அகற்றுஞ் சீலி-பச்சைப்பருவ பகவதி-அம்பா உச்சியில் வளர்ந்த உள்ளொளி கண்டு நிச்சயமாக நிலகுலந்தோம், யாம் இனி யாவரால் அறவுரைக்கேட்டு ஆனந்திப்போம், யாரை நாடி ஆபத்துபந்து வென்போம், அம்மே! எங்கன் வீடுகடோறும் குலதேவதையாயிருந்து காப்ப துடன் கிராம தேவதையாகநின்று தோன்றும் .இடுக்கண்களை நீக்குவதற்கு ஊர் காவற்காரியாகவும் காவலூர் அம்மனுகவும் விளங்கவேண்டும். அங்க னம் காக்கும் காப்பு நிச்சயமாயின் சிரசிற்றோன்றிய தீபம் ஒங்கி வளரவேண்டு மென்றுகதரினர்கள். அவர்கள் கோரிக்கையின்படி உச்சியின்சோதி வளர்ந்து மறைந்தது.

வடநாட்டிற் சாக்காவென்றும், தென்னாட்டில் வள்ளுவனென்று வழங்கும் கர்ம்ம குருக்களும், அரசர்களுங் குடும்பத்துடன் வந்து அவ்வையென்னு மம் பிகா தேகத்தை தகனஞ்செய்து சாம்பலைக் காவிரிநீரில் விடுத்து தாங்களும் நீராடித் தங்கடங்க னில்லஞ்சேர்ந்து,

ஞானவேட்டி.

விட்டகுறைவருமளவு முபதேசங்காண்
மெய்யுடலுந் தளர்ந்துபுவி மேலுநோக்கி
தட்டழிந்து விழும்போது வோதிவைத்த
சாத்திரத்தை கணப்போது முரைக்கப்போமோ
எட்டிரண்டு மறியாதார் குருக்களாமோ
என்னையினிப் பறையனென்று தள்ளலாமோ
மட்டமரும் பூங்குழல்வா லாம்பிகைப்பெண்
வங்கிவந்தி லுதித்த சாம்பவனும் நானே.

என்று மொழிந்த இறையறச்செல்வி
குன்று மொழியின் குறிப்பை யறிந்தோர்
மாறியாற்று மகமாயென்று
கூறிமன்னோர் குடிகடன்பால்

வீரு சிம்ம மாவோ டானே
யூருசூழ்ந்த வீடுக்கங் கண்டு
சிந்தை நிறைத்த செல்வக் கிழத்தி
யந்தர மெழுவி யருள்வடிவாகி
நின்றப் பேற்றை யுணர்ந்த வரயர்
சூன்ருக் குறையால் கோடமூற்ரூர்
வாலை யம்பிகை மகிழுளங்கொண்டு
வேலின்கண்ணி விரவியென்தாய்
நிம்பநீழல் நிரைகமலத்து
உம்பர் போற்ற வரவீற்றிருந்து
ஆலமர்ச்செல்வ னருளிய பிடக
சில மூன்றின் திடநிலையாகு
முத்த தத்வ மெய்மை யோதி
சுத்த சாதனத் தூய நிலையாம்
நோன்பு மூன்றினுட்பங்காட்டி
ஆன்ற விரதக் காப்பு மருளி
தான் சென்ரேங்கு சமாதி கால
மான்ற வுலகோர்க் கூறுகவென்று
பருகடகத்துப் பதினெண் பாநாள்
உருகதிர் வார மூற்ற பூரணை
சிகிரி தீப சிற்சுக சோதி
பர்கிமுக மூற்றப் பாங்கை கண்டோர்
அம்மை வல்லி யவ்வை யறத்தி
உம்மை பிறிந்து மூலகத் துறவோ
பொங்கு மாறி யாற்றிய வடிவை
எங்கு கண்டு விரைஞ்சுவ தென்தாய்
உந்தன் காவ லூருமுளத்து
மூந்து காக்கு முன்னவளாயின்
உச்சி சோதி யோங்கி வளர்ந்து
பிச்ச மருள்க பெருமுதல் வாணி
என்று மிக்க வேக்க முறுகால்
பின்னும் வல்லி பகிர்முக சோதி
நந்தாதீப நற்சுக மோங்கி
எந்தாய் வளர்ந்து யேகமூற்ரூள்
உற்ற யாக்கைக் குரியோர் நிமித்தர்
பெற்ற மன்ன ராவர் கைகொண்
டுமச் சுடலை யிட்டு பூதிச்
சாமக் காவிரி நீர் விளையாடி
இல்ல மெங்கு மாதி தேவியை

தமிழ்நாடு அரசுக் காப்பக
18365

வல்லி வாணி மகமா யென்றும்
பாடி யாடி பல்பெய ரிட்டு
நீடு வாழ்க நிரைகுல தேவி
சேரி யெங்குஞ் சிறப் பறைவித்து
நூரி பொங்கல் சோன்பு நூற்று
யெங்கு மெண்ணுண் கறமது கொண்டு
பொங்குஞ் சோற்றுக் கும்ப காட்டி
வறியோர்க் கூட்டி மனக்குறையாற்றி
உரிய வீத மூனத்தி னூன்றி.

அன்ன தானத்துக் காகும் பதார்த்தங்களைச் சேகரித்து அம்மன் பரிநிரு வாணமூற்ற வேம்பு:மரத்தடியில்வந்து பொங்கல்வைத்து எல்லோர் சோற்றை யும் ஒரு போராகக் குவித்து ஏழைகளைப் பூர்த்தியாக சாப்பிடவைத்து அவர வர்க ளில்லங்களுக் கனுப்பிவிட்டு விவேகிகள் ஒன்றுகூடி அம்மன் பாலபருவ மாதலின் வாலை யென்றும், சகலமுந் தெரிந்தவளாதலின் அவ்வையென்றும், இளந்தேகி யாதலின் பச்சையம்மனென்றும், அதிரூபியாதலின் வடிவுடை யம்மனென்றும், குணக்குடியாதலின் மலைன்மணியென்றும், வேல்போன்று பிரகாசமுற்றக் கண்ணுடையவளாதலின் வேற்கண்ணி, வேலாங்கண்ணியென் றும், கலிபாடும் பாணர் நிலையுற்றமையின் வாணியென்றும், சரமாகும் வாசி யைத் தன்வசந்திருப்பக் கொண்டமையின் சரசுவதியென்றும், தாமரை புட் பாசனத்தில் வீற்றிருந்தமையின் கமலாசனியென்றும், இராகத்துவேஷ மோகத்தை யகற்றினவளாதலின் திரிபுராந்தகியென்றும், மூப்பத்திரண் டறங்களையும் விவரித்து சற்குருவின் தருமத்தைப் பரவச் செய்தவளாதலின் அறச்செல்வியென்றும், அவரவர்க ளிதயத்துள்ள விருளை யகற்றினவளாத லின் பகவதி யென்றும், ஸ்திரீகளுக்குள் முதற்றேவியாக விளங்கினமையின் ஆதிதேவியென்றும், சிரசினுச்சியிற் தீபம்போல் பிரகாசித்தமையின் நந்தா விளக்கென்றும்

சூளாமணி.

மௌவன் மலர்வேய்ந்து மதுநாறு மணியைம்பாற்
கொவ்வை துயில்கொண்ட துவர்வாய்க்கொடியோ டொப்பா
டெய்வமணநாறு திருமேனி புறங்காக்கு
மவ்வையரோடெய்திமுத லவ்வையடிசேர்ந்தாள்.

மணிமேகலை.

சிந்தாதேவி செழுங்கலைநியமத்து
நந்தாவிளக்கே நாமிசைபாவாவாய்
வாளோர் தலைவி மண்ணோர் முதல்வி
யேழுலகுற்ற விடர் களைவாயென.

சீவகசிந்தாமணி.

செந்தாமரைக்குச் செழுநாற்றங் கொடுத்ததெங்கோ
ளந்தாமரையாளகலத்தவள் பாதமேத்திச்
சிந்தாமணியின் சரிதஞ்சிதர்ந்தேன்றெருண்டார்
நந்தாவிளக்குச்சுடர் நன்மணி நாட்டம்பெற்றே.

பலபெயரிட்டு சேரிகடோறும் அம்மன் வியாரங் கட்டிவைத்து அக் கட்டிடங்கள் வீதியிலிருக்குமாயின் திருவீதி யம்மனென்றும், மத்திய எல்லைக்குள் ளிருக்குமாயின் எல்லைம்மனென்றும், கழிகளின் ஓரங்களிலிருக் குமாயின் திருக்கழியம்மனென்றும், முல்லைநிலத் திருக்குமாயின் துளிர்காண கத்தம்மனென்றும், பனைமரச்சோலைகளி லிருக்குமாயின் கருக்கம்மனென் றும், தண்டெளிரங்குமிடத்தி லிருக்குமாயின் பாளையத்தம்மனென்றும், நந்தவனத்தி லிருக்குமாயின் பூஞ்சோலை யம்மனென்றும், ஒவ்வோர் பெயர் கள் வைத்து அம்மன் நிருவாணமுற்ற ஆடிமாதம் பௌர்ணமி திதி வருங் காலம் பத்துநாளைக்குமுந்தி அத்திருநாளில் அம்மனை உற்சாகப்படுத்தி ஆனந் திப்பதற்கு சேரிக்குள் வந்துள்ளவர்கள் வெளியேறலும் வெளியேறியுள்ள வர்கள் ஊர்வந்துசேரவும் கொலை, களவு, காமம், கள்ளருந்தல், பொய்முதலிய பஞ்சபாதகங்கள் அணுகாம லிருக்கவேண்டுமென்று காப்புக்கட்டி அம்மன் கழுத்தில் பொட்டுக்கட்டவேண்டிய குடும்பத்தான் கரத்திலு மோர் காப்புக் கட்டி அவன் கையினுல் அம்மன் பீடங்களை சுத்திசெய்து வைத்துக்கொண்டு ஒன்பதுநாள் வரையில் நீதியிலுந் தருமத்திலும் உற்சாக முண்டுபண்ணி பத் தாநாள் குடிகள் யாவரும் புதுப்பானைகள்கொண்டு பொங்கல்வைத்து எல் லோர் சாதத்தையும் ஒரேயிடத்தில் கும்பமிட்டு ஏழைகளைப் பசிதீரவுண்ணும் படிச்செய்து காவிரிநதியில் சேலை, குங்குமம், சந்தன தாம்பூலங்கள்விடுத்து ஏழைகளை யெடுத்துக் கட்டிக்கொள்ளும்படிச் செய்துவந்தார்கள். அதை யநுசரித்தக் குடும்பத்தோர்கள் குலதேவதையாகக் கொண்டாடிவந்ததுமன்றி மற்றுங் கிராமவாசிகளும் அந்தந்த சேரிகளில் அம்மன் வியாரங்கட்டி பகவன் உட்கார்ந்து நிருவாணதிசையடைந்த அரசமரத்தையும், அம்மன் உட்கார்ந்து பரிநிருவாணதிசையடைந்த வேம்புமரத்தையும் நாட்டி மெய்யறமாகும் புத்த தருமத்தை சகலருக்கு மூட்டி அம்மனுலோகிய முப்பத்திரண்டறங்களையும் பரவச்செய்துவந்தார்கள்.

பின்கலை நிகண்டு.

அம்பிகாதருமம்.

ஆதலர்சாலை யெம் அறுசமயத்தோர்க்குண்டி
ஓதுவார்க்குணவினோடாண் வத்திரமூடனேசேலை
மாதுபோகம் மகப்பால் மகப்பேறு மகவளர்த்தல்
வேதைநோய் மருந்துக்கெல்லாம் விலைகொடுத்துயிர்நோய் தீர்த்தல்.
கண்ணுடி பிறரில்கார்த்தல் கன்னிகாதானங்காவே

வண்ணர் நாவிதர் பெண்காத்தல் மடந்தடங்கண்மருந்து
தண்ணீர் செய்பந்தல் சோலை தலைக்கெண்ணெய் சிறைச்சோறோடு
பண்ணுன விலங் கூணல்கல் பசுவின் வாயிறைகொடுத்தல்.
அறவையாம் பிணமடக்கல் அறவைத் தூரியம்வகுத்தல்
நிறுவியோர்க்கிடங் கொடுத்தல் நிரையத்தீம் பண்ட னல்கல்
உறுதியாயுண்மைம்வாய்ந்த வுத்தமமாமெண்ணுன்
கறநிலே யன்பாலோது மம்பிகை தானமாமே.

இவ்வகை சிறப்புற்ற அம்மனைத் தமிழ்நா டெங்குமுள்ள வாசர்களுங் குடிகளுஞ் சிந்தித்துவந்ததுமல்லாமல் சோழநாட்டுள் உம்பள ஈராமமென் னும் வண்டுவாஞ்சேரியில் அவ்வை வியாரமென்றோர்மடமும், நாகை நாட் டில் வேற்கண்ணி வியாரமென்றும், வேலாங்கண்ணி மடமென்றுங்கட்டி அதில் நாகைநாட்டாருங் குற்ற யிடுக்கணுகுங் கொடுமாறி யென்னுங்கொள்ளே நோயையகற்றி யாரோக்கியம்பெற செய்தவளாதலின் அன்னுட்டார் அம்மனை விசேஷ வுற்சாகங் கொண்டாடிவந்தார்கள்.

வீரசோழியம்.

போராக்கரோரைவர்க்கற வமிழ்தம்பொழிந்தனேயே
ஆரமிழ்தமணி நாகர் குலமுய்ய வருளினேயே.

பாலிபாஷையில் நாகரென்றும், யீபுருபாஷையில் இஸ்ரேலரென்றும், தற்காலம் சீனரென்றும் வழங்கும் ஓர் கூட்டத்தாருக் குண்டாயிருந்த விடுக் கங்களேயகற்றி ஆதரித்த புத்தபிரானைக் கொண்டாடுங் கூட்டத்தார் நாகை நாதர் வியாரமென்றும் ஓர் கட்டிடங்கட்டி புத்ததன்ம சங்கமென்னு மும் மணிகளே ஆனந்தமாகக் கொண்டாடிவந்தார்கள்.

அதுபோல் வேலாங்கண்ணியம்மன் வியாரத்திலும் அம்மனு லோகியக் கொன்றுத்தின்னுமை யென்னும் நோன்பையும் 1. வாக்குகாப்பு, 2. மனே காப்பு, 3. தேகக்காப்பு, என்னும் மூவிரதங்களேயும் அனுஷ்டித்து வருங்கால்,

தேகத்தால் யாருக்கேனு மோர் தீங்குசெய்து அத்தீவினையால் தங்களுக் கோர் தீங்குண்டாகுமாயின் அம்மன் விரதத்தைக் கடந்த வபசாரத்திற்கு அங்கப்பிரதட்சணஞ் செய்துவந்து வேற்கண்ணி வியாரத்துள்ள பிட்சுணி களே வணங்கி யேழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானங்கள் செய்தும்,

தன் நாவைக் காக்காமல் ஒருவரை வைதும், வடுகூறியும், வஞ்சினும், பொய்புகன்றும் கெடுத்தத் தீங்கினுல் தனக்குண்டான தீவினைகளே யுணர்ந்து வெள்ளியினுலேனும், பொன்னினுலேனுங் கம்பிசெய்து குற்றஞ்செய்த தன்நாவுக் கலகிட்டு மோனத்துடன் வேற்கண்ணி வியாரம் வந்து பிட்சுணி களே வணங்கி நாவினுல்செய்த குற்றங்களே விளக்கி அலகையும் தட்சணையை யும் அதிபதிகளிடங் கொடுத்து அன்னதானம் வஸ்திரதானங்கள் செய்தும்,

தன் மனதைக் காக்காமல் போனப்போக்கில் விட்டு ஒருவரைக் கெடுத்தும் வஞ்சித்தும் காமவெகுளி மயக்கங்களைப் பெருக்கியுஞ் செய்த தீங்குகளினால் தனக்குண்டாய தீவினைகளை யுணர்ந்து வஞ்சத்தால் பொஞ்சித்தப் பொருட்களை வியாரத்துட் கொண்டுவந்து பிட்சுணி யதிபர்களிடமளித்து முப்பத்திரண்டறங்களையும் பாவச்செய்துவந்தார்கள்.

இத்தகைய தன்மாச்சிய நிரைவில் குறைவுதோன்றி கொள்ளநோய் கண்டு பால்பருவமுற்றப் பெண்களேனும் பிள்ளைகளேனும் பிராணுவஸ்தையிலிருக்குங்கால் தாய்தந்தையர்கள் ஆண்பிள்ளை யதி யவஸ்தையி லிருக்குமாயின் அரசமரத்தடியிலிருந்து அருளறம் விளக்கிய ஆதிதேவனைச் சிந்தித்து குழவி சுகமுற்றதுடன் துவராடை யணிந்து ஆண்டவனுக் கடிமையென்று ஆண்பிள்ளைகள் மடத்திற் சேர்த்துவிடுவதும், பெண்பிள்ளை யதி யவஸ்தையிலிருக்குமாயின் வேம்பு மரத்தடியிலிருந்து வேதவாக்கியங்கள் மூன்றையும் விளக்கிய விண்ணவர் முதல்வியை வணங்கிக் குழவி சுகமுற்றவுடன் மஞ்சள் சாட்டில் ஓர் பொன்பொட்டைக் கோர்த்து கழுத்தில் கட்டி மஞ்சளாடையுடுத்தி அம்மனுக் கடிமையென்று பெண்கள் வியாபாரத்தில் விடுத்து ஞான சாதன மடையும்படிச் செய்து அரசிருவென்றும், அம்மன் விழாவென்றுங் கொண்டாடி நீதிமார்க்கத்தை நிலைபெறச் செய்து வந்தார்கள்.

உள்ளத்துண்டா மூழதுகண்டோர்
கள்ளத்துண்டக் கைப்பொருள்கொண்டும்
அங்கங்கொண்ட வகவினைகண்டோர்
தங்கங்கண்ட தூளிலுருண்டும்
கலகமுண்டுக் காவாகாவில்
அலகுமிட்டு வம்மைகாவ
லூருள்ளாயி தீபங்கண்டும்
பேருள்வேலின் கண்ணிவியாரம்
போற்றியம்மை பொன்னடிவணங்கி
யேற்றியெண்ணுன் கறமதுமுந்தை
உண்டி யீய்ந்து உயிரையோம்பர்
பண்டைகாலப் பாங்கென்றெண்ணி
கூழுமாவுஞ் சோறுங்கொண்டு
யேழைக்கங்கங் கீய்ந்துவளர்ந்தும்
ஊழ்வினையற்று வுளமகிழற்கு
சூழறமொன்றே சூட்சியென்றுந்
தேம்புமாறி தீக்குறிகண்டோர்
வேம்படியம்மை வியாரம் விடுத்து
ஞானசங்கை நாடொரும்வினவி
மோனவரம்பை முற்றுமெழுப்பி
அண்ணலறத்தை யருளி
பண்ணவளறத்தை பகர்ந்தனன் பார்த்தன்.

ஔவையார் கோவில் எங்குளதென் றறியவேண்டியவர்கள் மாயூரம் மூத்தப்பேட்டை ரயில் பாண்டி ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கில் 7–வது மயிலிலிருக்கும் வண்டுறைவாள் மாரியம்மன் ஔவையார்க் கோவிலென்று கல்வெட்டில் எழுதியிருக்கு மவற்றாலும் அடியிற் குறித்துள்ள பாடலாலுந் தெரிந்து கொள்ளலாம்.

ஔவையார் துதி.

ஒருபோகுமயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

மாமேவு சோணாட்டு வளஞ்சேரி யும்பள நாட்டுத்
தேமேவு வண்டுறைவாள் சேரியெனுந் திருப்பதியில்.

அ ர ா க ம்.

மூதுரையென் றிசைக்கு நின்சொன் முதுமறையை
நிகற்பதுதான்
யாதுரையென் றிசைப்பனினி யெவனுரைக்கு மிவ்
வுலகம்
செல்வழி யீதென ஞாலந் தெளிந்திட நீ முனமு
ரைத்த
நல்வழியே வழியாக நான்மறையு நடக்குமால்.

மிருதினு லாகமனூல் விளம்புவலெலாமுனீ
கருதியருள் புரிந்துரைத்த கல்லூரியறவுரையால்
எவ்வயினு மெனையவரு மிசைப்பதிடை நிகழ்த்தமொழி
ஔவையார்வசன மிதென்றறியாதாருளரேயோ.

இவ்வகை அன்பும் அமைதியுங் ஆற்றலுமுற்ற தன்மரர்ச்சியத்தின் வட வெல்லை குமானிடர் தேசத்தின் ஓர்வகை மிலேச்ச சாதியார் வந்து குடியேறி யாசகசீவணஞ் செய்துகொண்டு வஞ்சினத்தாலும் மித்திரபேதத்தாலும் புத்ததருமங்களை மாறுபடுத்திவந்ததுமல்லாமல் புத்ததருமத்தைச் சார்ந்தவர் களையுந் தாழ்த்தி நிலைகுலைப்செய்துகால் மகமதிய துரைத்தனத்தார்வந்து குடியேறி மிலேச்சர்களின் மித்திரபேதத்தால் மகமதியர்கள் செய்துவந்த இடுக்கண்களுக்கஞ்சி திருசிராபுரத்திலும் நாகைநாட்டிலுமிருந்து புத்ததரு மத்தைப் பரவச்செய்துவந்த தமிழ் வித்துவான்களாகும் பாணர்களும் யாழுடன் இசைகலந்து பாடும் யாழ்ப்பாணர்களும் இலங்கை முதலிய தீவு களுக்குக் குடியேறினவர்கள் நீங்கலாக மற்றக் குடிகள் மகமதியர் மதத்தைத் தழுவியும் நின்றுவிட்டபடியால் நாகைநாட்டு நாகைநாதர் வியாரத்திருந்த பொன் சிலைகளைத் திருடிக்கொண்டுபோய் விற்பனைச்செய்து ஸ்ரீரங்கத் துள்ள புத்த மடத்தை மாறுபடுத்தி வேறுவகைக் கட்டிடங்களையும் மதில் களையுங் கட்டிக்கொண்டார்கள்.

இதன்மத்தியில் போர்ட்ச்சுகீய துரைத்தனத்தார் வந்து குடியேறிய போது வேற்கண்ணியம்மன் வியாரமும் பாழடைந்து நிலைகுலைந்திருந்தும் வருடந்தோறும் ஆடிமாதப் பௌர்ணமியில் அம்மனை தெரிசிக்கும்படி தூர தேசங்களிலிருந்து வருங் குடிகள் வழக்கம்போல் வந்தும் திகைத்து நிற்பவர் களைக்கண்ட போர்ட்ச்சுகீய குருக்கள் அதேயிடத்தில் தங்கள்மதக் கோவி லொன்றைக் கட்டி அம்மனைச் சிந்திக்கும்படிச் செய்து அம்மன் பெயரால் தட்சணைவருந் திரவியங்களை தன்மஞ்செய்யாமல் தங்கள் சுயப்பிரயோசனங் களுக் கெடுத்துக்கொள்ளுகின்றார்கள். இதன் சரித்திரபூர்த்தியைத் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் நாகைநாதர் பொன் விக்கிரகங்களை யபகரித் துக்கொண்ட சங்கதியை சிலாசாசன பதிவின் புத்தகத்திலும் திருமங்கை யாழ்வார் சரித்திரப்புத்தகத்திலும் தெரிந்துகொள்ளுவதுடன் வேற்கண்ணி யம்மன் வியார மாறலை யடி சிலாசாசன புத்தகத்திலும் இலங்காதீவத்து வித்தியாதன சாலையிலுள்ள போர்ட்ச்சுகீயர் சரித்திரத்திலும் தற்காலம் ஆடி மாதந்தோறும் நிறைவேறிவரும் அங்கப்பிரதட்சண வனுபவச்செயல்களி னாலும் தெரிந்துகொள்ளலாம்.

புத்த, தன்ம, சங்மென்னும் திரி மணிகளையே திரிசிரமாகக்கொண்ட திரிசிரபுரத்தில் ஸ்ரீ அரங்கர்மடமென்றும் அழகர் மடமென்றும் வழங்கிய இந்திரவியாரமும் நாகபட்டிண நாகைநாதர் வியாரமும் மாறுபட்டதுபோல,

தென்னிந்தியாவிலுள்ள இந்திர வியாரங்களையும் அரசு விழாக்களையும் அம்மன் உற்சாகங்களையும் பலவகையில் மாறுபடுத்திக்கொண்டு தன்மத்தைச் சாதித்து வந்தவர்களையுந் தாழ்ந்த சாதியாக வகுத்துத் தங்களைச்சேர்ந்தவர் களுக்குப் போதித்துவந்ததுமல்லாமல் குடியேறிவருகிறவர்களுக்கும் போதி த்து தாழ்ச்சியடையச்செய்து தருமங்களையும் மாறுபடுத்திவிட்டார்கள்.

அதாவது அரசு திருவென்றும் போதி பண்டிகை யென்றுங் கொண் டாடிவந்த பௌத்தர்கள் அரசமரத்தை யெவ்விடத்திற் காண்கின்றார் களோ அங்கு சாக்கையமுனிவரைச் சிந்தித்து நீதிநெறியினின்று சுகவாழ்க்கைப் பெற்றவருவதை புத்ததன்மத்திற்குச் சத்துருக்களாகிய பராயசாதியார்கண்டு அவற்றை மாறுபடுத்திக் கெடுக்கவேண்டுமென்னும் பொறுமையால் விவேக மற்றக்குடிகளை நெருங்கி நீங்களாரசமரத்தடியில் சிந்திக்கும் முனியாண்டவ னுக்கு, ஆடேனுங் கோழியேனும் பலிகொடுத்து கள், சாராயம், அபினி, கஞ்சா, சுருட்டு முதலியவைகளை வைத்துப் படைப்பீர்களானால் உங்கள் கோரிக்கை நிறைவேறும். அவ்வகை செய்யாமல் வெறுமனே சிந்திப்பதால் யாது பயனு மடையமாட்டீர்களென்று மான்தோலைப் போர்த்திருக்கும் குக்கலைப்போன்று பெரியமனிதனெனச் சொல்லிக்கொண்டு திரியும் மிலேச் சர்கள் வார்த்தையை கல்வியற்றக் குடிகள் நம்பி அரசுதிருவின் ஆனந்த சிலத்தை மறந்து கள்ளருந்துங் களவாணியில் நிறைந்து கேட்டுக்குப்போகும் வாசலைத் திறந்துகொண்டார்கள்.

அதுபோல் அம்மன் விழாவென்றும், வேம்புதிருவென்றுங் கொண்டாடுங்கால் கிராமத்தில் வாழுங் குடிகள் ஒவ்வொருவரும் பத்துநாள்வரையில் கொலை, களவு, காமம், கள்ளருந்தல், பொய் முதலிய பஞ்சபாதகங்களையற்றிருக்கவேண்டுமென்னுங் காப்புக்கட்டி ஒன்பதுநாள்வரையில் அம்மன் உற்சாகமும் அறநெறியுமூட்டி பத்தாநாள் கிராமக் குடிகளில் வீட்டிற்கு ஒருவர் புதுப்பானைகளும் அரிசி முதலியவைகளையுங் கொண்டுபோய் அம்மன் பீடத்திடம் பொங்கல்வைத்து வாழையிலைகளைப் பரப்பி எல்லோர் பொங்கிய சாதங்களையுங் கும்பமிட்டு ஆறியபின் ஏழைகளைப் பசிதீர உண்பிக்கச் செய்து ஆனந்தகோஷத்துடன் அவரவர்க ளில்லங்களிற் சேர்ந்து சுக வாழ்க்கை யுற்றிருப்பதைக் காணும் பராயசாதியோர் இவ்வொழுக்கத்தைக் கெடுக்கவேண்டுமென்னும் பொறுமையினால் தங்களால் ஏற்படுத்திக்கொண்ட கீழ்மைல சாதிக்கட்டுகளினால் ஒருவர் பொங்கலை ஒருவருடன் சேர்க்கவிடாமலும், சாதங்களை ஒன்றுகக் கொட்டவிடாமலும் ஆடுகளையும் மாடுகளையுங் கோழிகளையும் பலிகொடுக்கும்படி செய்து நல்லொழுக்கங்களை மாற்றிவிட்டார்கள்.

அம்மன் உற்சாகத்திற் செய்யும் நல்லொழுக்க தானங்கள் தீயொழுக்க நிலைக்கு மாற்றுவதற்கு வாதாரம் யாதெனில்:—

அம்பிகையம்மன் நிருவாணத்திற்கு நெடுங்காலங்களுக்குப்பின் மதுரையில் கோவிலன் மனைவி கன்னகை யென்பவளின் சிலம்பினால் நேரிட்ட தன்பத்திற்கு ஆற்றுமல் அவள் ஒருபுறத்து மார்பைத் திரிகியெடுத்து உதிரத்துடன் அரண்மனைமேல் வீசியசாபத்தினால் பத்தினி விரதகோபம் பற்றிப் பாழ்நேரிட்டகாலமும் அக்கோபாவேஷந் தணிய ஆயிரமனிதர்களை பலியளித்தகாலமும் ஆடிமாதமாகையால் அக்காலத்தில் கண்ணகாபத்தினியை வருஷந்தோறுஞ் சிந்திப்பவர்கள் மனிதபலியைத் தவிர்த்து ஆடுமாடுகளை பலிகொடுப்பது வழக்கமாயிருந்தது. அவ்வழக்கத்தைக் கந்தி நெடுநிதியாகும் அவ்வையின் சுத்தசன்மத்திற் சேர்த்து பாழாக்கிவிட்டார்கள்.

சிலப்பதிகாரம்.

கோமுறையுறைந்த கொற்றவேந்தன்
ரூன்முறைபிழைத்த தருதியுங்கேணீர்
ஆடிதிங்கள் பேரிருள்பக்கத்
தழல்சோகுட்டத் தட்டமிஞான்று
வெள்ளிவாரத் தொள்ளெரியுண்ண
வுரைசால்மதுரையோ டாசுகேடுருமெனு.
நிறங்கிளாருவிப் பாம்பின்ரூழ்வரை
கறுஞ்சினவேங்கை நண்ணிழற்கீழோர்
தெய்வங்கொள்ளுமின் சிறுகுடியீரே
தொண்டகந்தொடுமின் சிறுபறைதொடுமின்
கோடுவாய்வைம்மின் யெருமணியியங்குமின்

குறிஞ்சிபாடுமின் னறும்புகையெமின்
பூப்பலிசெய்ம்மின் காப்புக்கடைநிறுமின்
பரவலும்பாவுமின் விரவுமலர் தூவுமின்
ஒருமூலையிழந்த நங்கைக்கு
பெருமலைவஞ்சாது வளஞ்சுரக்கெனவே.

புத்தசன்மத்தை மாறுபடுத்தி மிலேச்சவதன்மத்தை நாட்டிய பராய சாதியோர் வஞ்சகபோதத்தை யறியா பேதைமாக்கள் சாந்ததேவியின் சுத்த சில மெய்யறத்தை மறந்து தாங்கள் செய்யுந் துற்கன்ம தீங்குகட்காயத் தோன்றும் தீவினைகளைத் தீர்க்க ஆடுகளையுங் கோழிகளையு மறுத்து தங்கள் கிராமங்களைப் பாழடையச் செய்வதுடன் தாங்களும் பாழடைந்துபோகின் றார்கள்.

இவ்வகைப் பாழுக்கெல்லாம் பர்ய சாதியோர்களே காரணமாயிருந்து செய்ததுமல்லாமல் சோழனுடைய நாட்டில் செத்தமாடுகளைத் தின்னும்படிச் செய்தும் வதைத்திருக்கின்றார்கள்.

ஞானவெட்டி.

இந்தவிதமென்றறியாருலகினி
லெந்தன் குலத்தை யிகழ்ச்சிகள் பேசினர்
வந்தவிதி யென்றறியாத மாந்தர்கள்
மாலப் பறையனென்றே சோழனாரினில்
மாடுகள் செத்து மடிந்ததை கண்டவ
ரோலமென்றேயதை யுண்ணும்படிச்செய்தார்
பாடுபட்டுப் பலன் காணுதழியுமிப்
பாவிக ளெங்கள் பரநில காண்கிலர்.

தங்கள் தீவினையை மாற்றிக்கொள்ளுவதற்கு ஆடுகளையுங் கோழிகளையும் பலிகொடுப்பதினால் முன்செய்த தீவினையுடன் சீவர்களைக்கொல்லுந் தீவினை யுங்கூடி குடிகெடுக்குமென்று விவேக மிகுத்தோரால் கூறியுள்ள சிலே டைப்பா.

பெருந்திரட்டு.

உங்கள் மக்களும் நீங்களும் நோய்பட
எங்கள் மக்களும் யாங்களு மென்செய்தோம்
உங்கள் தீவினை யோடு முதலியாய்
எங்கள் தீவினை யேற்பது திண்ணமே.

மனிதர்களையும் மாடுகளையும் குதிரைகளையுஞ் சுட்டுத்தின்னுச் சோம் பேறிகளாய்த் திரிந்த மிலேச்சர்கள் மேன்மக்களாயதும் ஒழுக்கம், சீலம், ஞானம், விடாமுயற்சி, கருணை, மீகை முதலிய நற்குணமிகுத்த விவேகிகள் கீழ்மக்களாயதுங் காரணம் விசாரணைக் குறைவேயாம்.

ஆடிமாத வாதிவாரப் பௌர்ணமியில் சிந்திக்கும் ஒளவையா ரியற்றி யுள்ளத் நிரிவாசகமாகும் நீதிநூலில் "புலையுங் கொலையுங் களவுந்தவிர்" என்று கூறியிருக்க அவ்வம்மையை சிந்திக்கும் நாம் ஆடுமாடுகளே யவளுக்கு பலிகொடுத்தா லேற்பளோ, ஒருக்காலு மேற்காள்.

பௌத்தமார்க்க சுத்தசீலர்களின் குலதேவதையாக விளங்கிய சாந்த தேவிக்கு புட்பார்ச்சனையை விடுத்து வுயிர்வதையாகும் பலிகொடுப்பதிலுல் அம்மன் நிருவாணகாலத்திற் கொடுத்திருந்த வாக்கும் மயங்கி கிராமங்களுஞ் சீர்குலைந்து உள்ளக்குடிகளும் நாளுக்குநாள் பாழடைந்து வருகின்றார்கள்.

மணிமேகலை.

சிந்தாதேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசை பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
யேனோ ருற்ற விடர் கழாவாயெனத்
தான்றொழு தேத்திக் தலைவியை வணங்கி.

இவ்வகைத் தொழுகையில் சற்குருவையும், அம்மனையுஞ் சிலத்தொழுகை யால் சிந்திக்குந்தோறும் புட்பங்களைக்கொண்டே யர்ச்சித்துவந்தார்கள்.

மணிமேகலை.

விரைமலரேந்தி விசும்போடிழிந்து
பொருவறு பூங்கொடி பூமியிற் பொலிந்தென
வந்து தோன்றிய மணிமேகலா தெய்வ
மூந்தை பிறப்பெய்தி நின்றுரள் கேட்ப.

சீவகசிந்தாமணி.

தண்ணந்தீம்புன லாடியதண்மலர்
வண்ணவார்தளிர்ப் பிண்டியினடிக்
கெண்ணியாயிர மேந்துபொற்றூமறை
வண்ணமாமல ரேற்றிவணங்கினுள்.

சற்குருநாதனையும், ஒளவையையுந் தாமரைப் புட்பத்தைக்கொண்டு அர்ச்சித்துவந்தபடியால் மடங்களைச் சார்ந்தக் குளங்களிலெல்லாம் தாமரைப் புட்பத்தையே விசேஷமாக வினைவுசெய்தார்கள்.

புத்ததன்மத்தினின்று ஒளவையைப்போல் ஓடேந்தி மடத்திற்சேர்ந்து பிட்சுணி நிலையடைந்த மாதவியின் மகள் மணிமேகலை யென்பவள் நிருவாண நிசை யடைந்தபின் சாந்ததேவிகளில் ஒருவளாக விளங்கியபோது கம்பன் மகன் அம்பிகாபதி யென்பவன் மணிமேகலையை சிந்தித்த பாடல்.

"காதன் மடந்தையர் கையறுங்காலையு மெய்யகலா
மேதகுநாணு மெலியவன்றே விழிப்போலுநெய்தல்
போதவிழ்மென் மலர்ப்புன்னை யங்கானல் பொருந்துமிந்த
மாதவிபெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே.

புத்த தன்மத்தைச்சார்ந்து துறவடைந்து நிருவாண திசையடைந்த ஆண் மக்களே தேவர்களென்றும், பெண்மக்களே தேவிகளென்றுங் கொண்டாடி வந்தார்கள்.

சிலப்பதிகாரம்.

போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதானம் புரிந்த
மாதவிதன் றுறவுங் கேட்டாயோதோழி
மணிமேகலை துறவுங் கேட்டாயோ தோழி.

கோவிலன் மனைவி தன்னகை யென்பவளுக்குண்டான கோபாவேஷத்தை யடக்குதற்கு ஆயிரங் கொல்லரை பலிகொடுத்துவிட்டு மதுரையில் கண்ணகை பீடமமைத்து மனிதர் பலிக்கு பதிலாக ஆடு மாடு கோழி முதலியவைகளே பலிகொடுத்துவந்தார்கள்.

சீவகசிந்தாமணி.

ஊன்சுவைத்துடம்புவீக்கி நரகத்தி லுரை தனன்றே
யூன்றினு துடம்புவாட்டி தேவரா யுரைதனன்றே.

சிலப்பதிகாரம்.

கொன்றையிலிருந்த வெற்றிவேற்செழியன்
பொற்றொழிற் கொல்ல ரீரைஞ் ஞூற்றுவர்
பொருமலை குறைத்த திருமாபத்தினிக்
கொருபகலெல்லை யுயிர்பலியூட்டி

கிராமதேவதையாயிருந்து ஊர்க்குடிகளைக் காப்பாற்றும் வாக்களித்தவள் கண்ணகையன்று.

கிராம தேவதையாகவும், குல தேவதையாகவும், ஊர்க்காவற்காரியாகவும், காவலூர் அம்மனாகவு மிருப்பதாய் வாக்களித்து ஆழியாற்றோன்றுங் கொடுமாறியை யகற்றி ஆரோக்கியம் பெறச்செய்தவள் அம்பிகை யென்னு மவ்வையாதலின் அவளே சிந்திப்பவர்கள் சுத்தசீலத்தினின்று பொய், கொலை, களவு, கள்ளருந்தல், காமம் முதலிய பஞ்சபாதகங்களே யகற்றி தன்ம சிந்தையைப் பெருக்கி சிந்திப்பதே சிந்தனையாகும்.

சாந்ததேவதையை சாந்தசீலத்தால் சிந்திப்போமாஞல் நமதுகிராமங்கள் சிறப்படைவதுமன்றி நாமும் சுகவாழ்க்கை யடையலாம்.

இதுவே சத்தியம்.

வாழி வேம்படி யம்மையறச் செல்வி
வாழி யம்பிகை வல்லபை வாழியே
வாழியே வளர்சங்கமமர்ந்தவாழி
வாழி சாக்கை கிளைசங்கம் வாழியே.

முற்றிற்று.

காப்பக நூலகம் 18354